பாலர் கல்வி

தொகுதி 28	சோபகிருதுஸ்ரீ தை - மாசிமீ 1964 பிப்ரவரி	பகுதி 11

ஆசிரியர்கட்கு ஒரு வேண்டுகோள்

54ஆவது சென்னை மாநிலக் கல்வி மாநாடு இவ்யாண்டு மே மாதம் கும்பகோணத்திலே நிகழும்; இதற்கான ஏற்பாடுகள் இயங்கி வருகின்றன. இம் மாநாட்டினைச் சிறப்புற நடத்துவது நமது முதற்பணியாகும். தென்னிந்திய ஆசிரியர் சங்கம், எல்லாவகை ஆசிரியர்க்கும் பொதுமான தாபனமாதலால், ஆசிரியர்கள் தங்கள் தங்கள் தரம் பாராமல் யாவரும் ஒருங்கு கூடித் தாம் சமூகத்திற்கு ஆற்றும் அருந் தொண்டினை எடுத்துக் கூறி, கல்வி எவ்வாறு வளம் பெறவேண்டும் என்று பொதுமக்களுக்குத் தெரிவிக்கவேண்டும். மற்றைத் துறைகளிலே பணியாற்றுபவர்கள் பெருந் திரளாகக் கூடி மாநாட்டினை நிகழ்த்துவது போல் நாமும் கூடி மாநாட்டினை நடத்திவைத்தால், நம்மிடம் பொது மக்களுக்கு மதிப்பும் நம்பிக்கையும் ஏற்படும். கல்வி சம்பந்தமான பொருட்காட்சி ஒன்றினை அமைத்து, கற்பிப்பதற்கு வேண்டிய உபகரணங்களை நாமே செய்து கொள்ளும் வகையினை எடுத்துக்காட்டுவது இன்றியமையாததாகும். இக்காலக் கல்வியிலே விஞ்ஞானம், கணிதம் இவை முதலிடம் பெற்றுள்ளன; இவற்றின் தரம் ஓங்க வேண்டுமென்று எல்லா நாட்டினரும் ஒருமனதாகக் கூறுகின்றனர். இவற்றை நன்கு கற்பதற்கு ஆராய்ச்சிச் சாலைகள் பள்ளிகளிலே அவசியம் வேண்டும்; உபகரணங்கள் பலவேண்டும். இவ்வுபகரணங்களிற் பலவற்றை நாமே நமது மாணவர்களைக் கொண்டே செய்து கொள்ள இயலும். இவ்வாறு செய்யக் கூடியவை எவை என்று இப் பொருட்காட்சியிலே விளக்க வேண்டுமென்பது எமது ஆசை. கல்வி முறைகளிலே வல்லுநர் தமது கடமையாக மாநாட்டிற்கு வந்து ஆசிரியர்களைத் தமது பணிகளிலே ஊக்குவிக்குமாறு யாம் வேண்டுகின்றோம்.

தி. ஸ்ரீ. ராஜகோபாலன் (செயலன்)

மலேயா ஆசிரியர் சுற்றுலா

கடந்த டிசம்பர் மாதம் 7-ஆந் தேதி மலேயாத் தமிழ்ப் பள்ளிகளிலிருந்து ஆசிரியர் சிலர் சுற்றுலாவாக நம் நாட்டிற்கு வந்தனர். அவர்களைச் சென்னைத் துறைமுகத்தில் வரவேற்றுத் தென்னிந்திய ஆசிரியர் சங்கக் கட்டிடத்திற்கு அழைத்து வந்தோம். அவர்கள் இக் கட்டிடத்திற் சில நாட்கள் தங்கிப் பின்னர் தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான இடங்களுக்குச் சுற்றுலாவாகச் சென்றனர். ஆங்காங்கு உள்ள மாவட்ட ஆசிரியர் சங்கங்கள் சுற்றுலாக் குழுவினரை நன்கு வரவேற்று வேண்டிய வசதிகளை அளித்தன. சுற்றுலாவை முடித்துக்கொண்டு, சென்ற ஜனவரி மாதம் 3-ஆந் தேதி இக்குழுவினர் சென்னை திரும்பினர்; ஒரு வார காலம் இந்து உயர்நிலைப் பள்ளியில் தங்கியிருந்தனர்.

இக்குழுவினர் தாயகத்திற்குத் திரும்பு முன்னர் ஜனவரி 11-ஆந் தேதி இவர்களுக்கு ஒரு விருந்தினை அளித்தோம் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் சார்பிலே. சுற்றுலாக் குழுவினரின் செயலர் உயர் திரு A. வேலாயுதம். இக்குழுவினர் மலேயாவிலுள்ள தமிழ்ப் பள்ளிகளிலிருந்து சுற்றுலாவிற்காகக் கூடியவர்கள். விருந்தின்போது இவர்கள் மலேயாவில் தமிழ்க் கல்விக்காக ஆற்றும் பெருந்தொண்டினைப் பாராட்டிப் பேசினர் தென்னிந்திய ஆசிரியர் சங்க உறுப்பினர். சுற்றுலாக் குழுவின் செயலர் குழுவினரின் சார்பிலே நன்றி நவின்றார். தங்களது முன்னோர் வாழ்ந்து வந்த தமிழகத்தைப் பார்க்கத் தாங்கள் ஆவலுடன் வந்ததாகவும், தாயகத்தில் பெரிய தலங்களையும் நகரங்களையுங் கண்டு மிகக் களித்ததாகவும், தாயகத்தின் பண்டைப் பண்பாடுகளையும் நாகரிகத்தையும் தாங்கள் என்றென்றும் பாராட்டுவதாகவும், தாயகத்தின் வாழ்க்கை முறையையே தாங்கள் பின்பற்றி வருவதாகவும் இவர் எடுத்துரைத்தார். மலேயாவிலே ஆங்கில மொழியிற் பயிற்றுவிக்கும் பள்ளிகளும், மலேயா மொழியிற்பயிற்றுவிக்கும் பள்ளிகளும், தமிழ் மொழியிற் பயிற்றுவிக்கும் பள்ளிகளும் உள்ளன. ஆங்குத் தமிழர், சீனர், உள்நாட்டினர் இவர்கள் யாவரும் தமக்குள் யாதொரு வேற்றுமையுமின்றி ஒருமனப்பாட்டுடன் வாழ்கின்றனர்; தமிழர் மற்றவர்களுடன் சரிநிகர் சமானமாகப் பழகுகின்றனர்; தங்களுடைய மரபிற்கேற்ற பழக்க வழக்கங்களைக் கைவிடாமல், ஏனையோருடன் போற்றத் தகுந்த முறையிலே கலந்து பழகிவருகின்றனர், பெரிதும் தமிழகப் பற்றுடையவர் என்றோதினார் உயர் திரு A. வேலாயுதம் அவர்கள்.

மலேயாவிலுள்ள தமிழ் ஆசிரியர்கட்கும் ஈங்குள்ள ஆசிரியர்கட்கும் இப்போது புதுப்பிக்கப்பெற்ற தொடர்பு மேன்மேலும் வளர்ந்து இரு நாட்டினரும் பயன்பெற வேண்டுமென்பது எமது அவா. இத்தொடர்பு நமது மாதப் பத்திரிகைகளின் மூலமாக வளரும். நாமும் இங்கு நிகழும் நிகழ்ச்சிகளையும் நமது சாதனைகளையும் நமது பத்திரிகையில் விவரிக்கலாம். அவர்களும் இப்பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் அனுப்பலாம்.

மலேயாத் தமிழாசிரியர்கட்குத் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் வாழ்த்துக்களை எடுத்துக் கூறுகிறோம். அவர்கள் தமிழ்மக்களுக்கு ஆற்றிவரும் தொண்டு மேன்மேலும் ஓங்குமாறு இறைவன் அருள் செய்வானாக.

ஜியோமிதி - கற்பித்தல்

முதன் முதலாக ஜியோமிதி கற்பிப்பதைப் பற்றிய கூட்டம் அனைத்திந்தியா கல்விக் குழுவின் (Central Institute of Education) சார்பிலே கோவைப் பெரிய நாயகன் பாளையத்தில் நடந்தது. சில மாவட்டங்களிலிருந்து கணித ஆசிரியர்கள் கூடி, ஜியோமிதி கற்பிக்கும் வகையினை ஆய்ந்தனர். டில்லியிலிருந்து உயர்திரு கிலட்டி, உயர்திரு நிகரம் இவர்கள், All India Extension Service of Secondary Education-இன் சார்பிலே இக் கூட்டத்தை நடத்தி வைத்தனர். மாஜி கணித ஆசிரியர் பரமேச்வர அய்யர் (உசிலம்பட்டி) அவர்கள் தயாரித்த ஜியோமிதிச் சித்திரங்களைப் பற்றி ஆராய இக் கூட்டம் திரட்டப்பெற்றது. கூட்டத்தினர் இச் சித்திரங்களை ஆய்ந்து, இவற்றை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறினர். பின்னர் நான்கு நாட்களிலே ஜியோமிதி கற்பிக்கும் விஷயங்களை நன்கு பரிசீலனை செய்தனர் கூடியிருந்த ஆசிரியர். ஜியோமிதியின் பெருமை, கற்பிக்கும்போது ஏற்படும் சிக்கல்கள், மாணவரது மனப்பான்மை, தேற்றங்கள், பயிற்சிகள் (riders) இவற்றைப் பயிற்றுவிக்கும் வகைகள் இவைபற்றி ஆசிரியர்கள் நன்கு ஆராய்ந்து தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினர். மாணவர்க்காக ஒவ்வொரு பள்ளியிலும் கணிதக் குழு (Mathematics Club) ஒன்று நிறுவ வேண்டும் என்றும், பள்ளிக்கூட நாட்களில் ஓய்வு நேரத்திலே மாணவ மாணவியர் கணித சம்பந்தமான சித்திரங்களைத் தயார் செய்யலாம் என்றும், கணித சம்பந்தமான விநோதங்களையும், கணிதத்தின் வளர்ச்சியைப் பற்றியும், கணித மேதைகளது சரிதங்களையும் கற்றுக் கொள்ள வாய்ப்பு அளிக்க இயலும் என்றும் சிபார்சு செய்தனர் கூடியிருந்த ஆசிரியர்கள்.

பெரியநாயகன் பாளையத்திலுள்ள ஆசிரியர் கல்லூரியிலே இக் கூட்டம் கூடிற்று. ஆசிரியர் கல்லூரி முதல்வர் உயர்திரு குழந்தைவேலு அவர்களும், பொறியியற் பள்ளி முதல்வர் உயர்திரு ஸ்ரீநிவாஸ அய்யர் அவர்களும், கணித முறைப் பேராசிரியர் உயர்திரு சுந்தரராஜ ராவ் அவர்களும் மற்றை ஆசிரியர்களுடன் கூடியிருந்து, கூட்டத்தின் நடவடிக்கைகளைச் சிறப்புற நடத்தி வைத்தனர். பெரியநாயகன் பாளையம் கல்லூரிகளின் போஷகர் (டைரக்டர்) உயர்திரு அவிநாசிலிங்கம் அவர்கள் இக் கூட்டத்தின் நோக்கங்களைப் பாராட்டினார்; கணிதம் கற்பிப்பது நல்ல வகையிலே ஓங்க வேண்டுமென்றும், கணிதம் வாழ்க்கையுடன் இணைப்புப் பெறவேண்டுமென்றும், கணிதம் மற்றைக் கலைகளுக்கும் அடிப்படையாக இருப்பதால் இதற்கேற்றவாறு கற்பிக்கும் வகைகளையும் விஷயங்களையும் ஆராயவேண்டும் என்றும் எடுத்தோதினார்.

திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் உயர்திரு T. S. ராஜகோபாலன் அவர்கள், இந்தியாவிற் பண்டைக் காலத்திலே ஜியோமிதி எவ்வாறு முதல் இடம் பெற்றிருந்தது என்றும், அக் காலத்தில் கணித மேதைகள் தேற்றங்களாகக் கொண்டவைதாம் இக் காலத்திய தேற்றங்களாகும் என்றும், அவர்களது ஆற்றலுக்குக் காரணம் வைதிகச் சடங்குகளைக் குறையறச் செய்யவேண்டும் என்ற மனப்பான்மையே என்றுங் கூறினார். சுல்வ சூத்திரம் என்பது யாது, இதனால் ஜியோமிதி, எண் கணிதம், பீஜ கணிதம் (அல்ஜிப்ரா)- சோதிடம், வானநூல் இவை எவ்வாறு தழைத்தோங்கின என்றும் விவரித்தார்.

முதல் ஐந்து வகுப்புவரை தமிழ் இலக்கணம் போதித்தல்

By Sri. C. Ekambara Iyer, Tamil Pandit, P. S. High School

வாக்கிய மாற்றம்

முதல் வகுப்புச் சிறுவர், ஆண்டு இறுதியில் இரண்டு மூன்று வார்த்தைகளாலான வாக்கியங்களை எழுதவும் படிக்கவும் பழகி யிருப்பர். பிள்ளைகளை, ஒருவரைப் பார்த்து ஒருவர் பின்வருமாறு பேசும்படி செய்யலாம்.

கோபால் : கண்ணா, எழுந்து நில். இப்போது என்ன காரியம் செய்கிறாய் ? கண்ணன் : நான் எழுந்து நிற்கிறேன். கமலம்: வாணி! நீ கண்ணை மூடிக்கொள். திறக்காதே. இப்போது நீ சொல். என்ன செய்துகொண்டிருக்கிறாய் ? வாணி : நான் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறேன். கமலம்: நீ கண்ணைத் திறக்கவில்லையே ? வாணி : நான் கண்ணைத் திறக்கவில்லை. சிறுவர்களைப் பேச்சு அளவில் செய்தி வாக்கியத்திலும், கேள்வி வாக்கியத்திலும், கட்டளை வாக்கியத்திலும், உடன்பாடு, எதிர்மறை வாக்கியத்திலும் உரையாடப் பழக்கலாம்.

இரண்டாவது வகுப்பில் சிறுவர்கள், சிறியனவும் சற்றுப் பெரியனவும் ஆன வாக்கியங்களை எழுதவும் படிக்கவும் கூடும். கோவிந்தன் : சிவா! இவன் எழுத்தைப் பார். எவ்வளவு நன்றாக இருக்கிறது! உனக்கு இப்படி எழுதத் தெரியுமா? சிவன்: நானும் எழுதுவேன். இவ்வளவு நன்றாக எனக்கு எழுத வராது. குமரன் : குரு, நீ போ. குரு : குமரா, என்மேல் கோபமா ? ஏன் அப்படிச் சீறி விழுகிறாய் ? பலராமன் : சுந்தரம், அதோ பாம்பு வருகிறது. ஓடிப்போ. சுந்தரம் : அவ்வளவு பயமா உனக்கு ! அதைக் கையில் கூட எடுப்பேன். ஒன்றும் செய்யாது.

இப்படி வியப்பு, கோபம், பயம் போன்ற உணர்ச்சி வாக்கியங்களில் பேசவும் எழுதவும் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிக்கலாம்.

மூன்றாவது வகுப்பில் சிறுவர்களை, குறித்த வாக்கியத்தைக் கேட்ட வண்ணம் வேறு வகை வாக்கியமாக மாற்றிச் சொல்லும்படியும் எழுதும்படியும் செய்யலாம்.

உபாத்தியாயர் : சேகரா, நீ ஓடுவதாகச் சொல். சேகரன் : நான் ஓடுகிறேன். உபாத்தியாயர்: சேகரா, நில். இப்போது ஓடுகிறாயா ? சேகரன் : நான் ஓடவில்லை. உபாத்தியாயர் : சேகரா, கந்தனைப் பாடச் சொல். சேகர் : கந்தா, பாடு.

மேலே கண்ட வண்ணம் ஓர் செய்தியை வாக்கியமாகச் சொல்லவும், நிகழ்ச்சியை மறுத்துச் சொல்லவும், கட்டளையான வாக்கியத்தைச் சொல்லவும் பயிற்சியைத் தரலாம். மேலும் உணர்ச்சி வாக்கியத்தைச் சாதாரண (செய்தி) வாக்கியமாக மாற்றும் வகையைக் கூறலாம்.

இந்தப் பூவின் அழகே அழகு ! (உணர்ச்சி) இந்தப் பூ மிக அழகாக உள்ளது. (செய்தி) இந்த மலையின் உயரம் தான் என்ன ! இந்த மலை அதிக உயரம் உள்ளது. இவன் என்ன, படிக்கவா செய்கிறான் ! இவன் படிப்பதே யில்லை.

நான்காவது வகுப்பில் சிறுவர்களுக்கு, வாக்கிய மாற்றத்தில் மேலும் பல பயிற்சி

கள் தரலாம். வாக்கியங்களில் பல எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் ஆகிய மூன்றும் பெற்றிருப்பதையும், சில செயப்படு பொருளே பெறுமலிருப்பதையும் பற்றி முன்னமேயே சொல்லியிருக்கிறேம். செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியத்தில், செயப்படு பொருள் பெருத வாக்கியத்தை, ஒன்றை மற்றென்ருக மாற்ற முடியாது என்றும் கூறவும்.

பாலன் பாடத்தைக் கவனித்தான். இது செய்வினை வாக்கியம். பாடம் பாலனுல் கவனிக்கப்பட்டது. (இது செயப் பாட்டு வினை வாக்கியம்). செய்வினை வாக்கியத்தில் எழுவாய் முதல் வேற்றுமையாகவும், செயப்படு பொருள் இரண்டாம் வேற்றுமையாகவும் இருக்கும். செயப் பாட்டு வினை வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்னும் மூன்றும் உருவ மாறுபாடு அடையும். பயனிலை செயப் பாட்டு வினையாளுல் செயப்படு பொருள் முதல் வேற்றுமையாகவும், எழுவாய் மூன்ரும் வேற்றுமையாகவும் திரியும். இருவகை வாக்கியங்களிலும் எழுவாய்க்கும் பயனிலைக்கும் ஏற்ற பொருத்தம் மாறலாகாது. உதாரணம்:

மாமி கோலம் போடுகிருள். (செய்வினை) கோலம் மாமியால் போடப்படுகிறது. (செயப் பாட்டு வினை).

பயிற்சி:

(அ) செயப் பாட்டு வினையாக்கி எழுதுக:

1. பிள்ளைகள் கற்களை எறிந்தார்கள்.

2. நீ கண்ணைத் திற. (திற என்னும் செய்வினை திறக்கப்படட்டும் என்று மாறும்).

3. அவர்கள் நெருப்பின் ஒளியைக் காண்கிருர்கள்.

4. இடையன் தினமும் இரு வேளைகளிலும் பால் கறப்பான்.

5. வீட்டை மெழுகுவதில்லை.

(ஆ) செய்வினையாக மாற்றி எழுதுக:

1. என்னுல் கதவு மூடப்பட்டது.

2. சேவகர்களால் வாயில் காக்கப்படுகிறது.

3. உன்னுல் வாய் மூடப்படும்.

4. மக்களால் கடவுள் தொழப்படுகிருர்.

5. கொடிய மன்னன் எவராலும் போற்றப்படுவதில்லை.

தானே செய்யும் வினை (தொழில்) தன்வினை யென்றும், வினை மற்றொருவனைக் கொண்டு செய்யப்பட்டால் அது பிறவினை என்றும் கூறப்படும்.

உதாரணம்:

நெய் உருகுகிறது. (தன்வினை) அவள் நெய்யை உருக்குகிருள். (பிறவினை) குதிரை ஓடுகிறது. (தன்வினை) குதிரையை ஓட்டினுன். (பிறவினை).

தன்வினைப் பகுதியைப் பிறவினைப் பகுதியாக்கினுல் வாக்கியம் எளிதில் எழுதப்படும்.

தன்வினைப் பகுதி	பிறவினைப் பகுதி
செய்	செய்வி
படி	படிப்பி
போ	போக்கு
பாய்	பாய்ச்சு
உருள்	உருட்டு

நட-நடத்து: எழு-எழுப்பு: பயில்-பயிற்று.

(அ) தன்வினைகளைப் பிறவினைகளாக மாற்றி எழுதுக.

1. வயலில் தண்ணீர் பாய்கிறது.

2. குழந்தை காலையில் எழுந்தது.

3. மாடு மேய்ந்தது.

4. கூட்டம் கூடியது.

(ஆ) பிறவினைகளைத் தன் வினைகளாக மாற்றி எழுதுக.

1. தென்னை மரத்தை வளர்த்தான்.

2. அவன் சக்கரத்தை உருட்டுகிருன்.

3. இரண்டு புத்தகங்கள் வருவிப்பர்.

4. இராமனை ஆசிரியர் திருத்தினர்.

ஐந்தாம் வகுப்பில் சிறுவர்களை வாக்கிய மாற்றத்தில் மேலும் பழக்கலாம்.

நேர்க் கூற்று வாக்கியத்தை அயல் கூற்று வாக்கியமாக மாற்றல்: நான் கந்தனை நோக்கி, "நீ கட்டாயம் பள்ளிக் கூடம் வா" என்று சொன்னேன். இது நேர்க்கூற்று வாக்கியம். நேர்க்கூற்று வாக்கியத்தை நேர்ப் பேச்சுக் குறிகளுக்குள் " " எழுத வேண்டும். அயல் கூற்று வாக்கியத்தில் நேர்ப் பேச்சுக் குறிகள் மறையும். வாக்கியமும், மாறுபடும். நான் கந்தனிடம் என்ன சொன்னேன்? நான் கந்தனைக் கட்டாயம் பள்ளிக்கூடத்துக்கு வரும்படி சொன்னேன். இது அயல் கூற்று வாக்கியம்.

(அ) அயல் கூற்று வாக்கியமாக மாற்று.

1. அவன் "என் போல் பேசுவாரில்லை" என்று கூறினன்.

2. உபாத்தியாயர் "பிள்ளைகளே! இந்தக் கணக்கு உங்களுக்குப் போடத் தெரியுமா?" என்ருர்.

3. நீ என்னை நோக்கி, "நீ என்ன சொல்கிருய்?" என்ருய்.

4. அவர்கள் "நாங்கள் ஒரு வார்த்தை சொல்கிறோம்" என்ருர்கள்.

(ஆ) அயல் கூற்று வாக்கியத்தை நேர்க்கூற்ருக மாற்றி எழுதுக.

1. நான் பிள்ளைகளை அழைத்து ஒரு வாரத்தில் பாடம் முடிக்கப்படும் என்று சொன்னேன்.

2. எங்களையெல்லாம் மைதானத்துக்கு வரும்படி ஆசிரியர் அழைத்தார்.

3. தொட்டியில் தண்ணீர் பிடித்து வைக்கும்படி அவர் என்னைப் பார்த்துச் சொன்னர்.

4. எல்லாவற்றையும் தம்மிடம் விட்டு விடும்படி அவர்களிடம் அப்பெரியார் கூறினர்.

பயிற்சி:

கீழ் வரும் வாக்கியங்களைக் கேட்டபடி மாற்றி எழுதுக.

1. நான் இன்னும் ஒரு முறை பேச மாட்டேன். (உடன்பாடாக)

2. உனக்குக் கேள்விகள் கேட்கத் தெரியும். (விஞவாக)

3. யானே கள்வன். (எதிர்மறையாக)

4. வழியில் வண்டியை நிறுத்தினர். (செயப்பாட்டு வினையாக)

5. சட்டம் எரிக்கப் படுதல் கூடாது. (செய்வினையாக)

6 வண்டி நிற்கட்டும். (பிற வினையாக)

7. குழந்தைகளைப் பாயில் படுக்க வைத்தனர். (தன் வினையாக)

8. நீ என்னிடம் "உன்னை வந்து நான் பார்க்கிறேன்" என்ருய். (அயல் கூற்ருக)

9. தன் புத்தகம் எடுத்து எடுத்துக் கிழிந்து போனதாக அவன் பிள்ளைகளிடம் கூறினன். (நேர்க் கூற்ருக)

10. சத்திய மூர்த்தி நல்லவர். (அர்த்தம் மாருமல் எதிர் மறையாக)

தனி வாக்கியத்தில் ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும் இருக்கும். தொடர் வாக்கியத்தில் ஒரு எழுவாயும் பல பயனிலைகளும், பல எழுவாய்களும் ஒரு பயனிலையும் இருக்கும். கலவை வாக்கியத்தில் ஒரு பிரதான (முக்கியமான) வாக்கியமும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணை வாக்கியங்களும் இருக்கும்,

முனியன் வயலை அறுவடை செய்தான். (தனி வாக்கியம்).

முனியன் வயலை அறுவடை செய்து நெல்லை வீட்டுக்குக் கொண்டு போனன். (தொடர் வாக்கியம்) நேருவும் ராஷ்டிரபதியும் சென்னைக்கு வந்தார்கள். (தொடர் வாக்கியம்)

பள்ளிக்கூடத்துக்கு வந்ததும் ஜுரம் வந்து விட்டதாக மணி சொன்னன். (கலவை வாக்கியம்.)

கோழி கூப்பிட்டவுடன் குடியானவன் எழுந்து போனன் என்று அவர்கள் தெரிவித்தார்கள். (கலவை வாக்கியம்.)

மேலே கண்ட தொடர் வாக்கியங்களையும் கலவை வாக்கியங்களையும் தனி வாக்கியங்களாகப் பின்வருமாறு பிரிக்கலாம் :

தொடர் வாக்கியத்திலிருந்து தனி வாக்கியங்கள் ஆக்கல் :

1. முனியன் வயலை அறுவடை செய்தான். (அவன்) நெல்லை வீட்டுக்குக் கொண்டு போனன்.

2. நேரு சென்னைக்கு வந்தார். ராஷ்டிரபதி சென்னைக்கு வந்தார்.

கலவை வாக்கியத்திலிருந்து தனி வாக்கியங்கள் ஆக்கல் :

1. (நான்) பள்ளிக்கூடத்துக்கு வந்தேன். ஜுரம் வந்து விட்டது. மணி சொன்னன்.

2. கோழி கூப்பிட்டது. குடியானவன் எழுந்து போனன். அவர்கள் தெரிவித்தார்கள்.

பயிற்சி :

பின் வருவனவற்றைக் கேட்டபடி மாற்றுக.

1. மழை பெய்தது ; வீட்டுக்குப் போனேன் ; ஒரு குடை எடுத்து வந்தேன். (ஒரு வாக்கியமாக)

2. பள்ளிக்கூடம் விட்டதும், வீட்டுக்குச் சென்ற பிள்ளைகள், குளத்தில் சில தவளைகள் இருப்பதைப் பார்த்தார்கள். (பல வாக்கியங்களாக)

3. முருகன், கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. ஆசிரியர் அவனை அடித்தார். (கலவை வாக்கியமாக)

4. நான் நேற்று நல்ல படம் பார்த்தேன் ; அதைக் கணபதி பார்த்தான் ; முரளி பார்த்தான். (தொடர் வாக்கியமாக)

5. இராமன் ரயில் ஏறிவந்தான் ; ஒரு வண்டியைப் பேசினன் ; அதில் ஏறிக்கொண்டான் ; வீடு போய்ச் சேர்ந்தான். (தொடர் வாக்கியமாக).

“க்யூ” தர்பார்

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை (ரிடயர்ட்)

[இந்தச் சம்பாஷணை, 4, 5-வது வகுப்புக் குழந்தைகளால் 2, 3 தடவை நடித்துக் காட்டப்பட்டது.

உணவுப் பங்கீடு வெகுவாக அமுலில் இருந்தது அக்காலம். பல பிள்ளைகளும் பெண்களும் இந்தச் சம்பாஷணையில் பங்கு எடுத்துக்கொள்ளலாம். ஆங்காங்கு வேண்டிய ஏற்பாடுகளைக் குழந்தைகளே தங்களது கைவேலை, தொழிற் பயிற்சிக் காலத்தில் செய்துகொள்ளலாம்.

கோமாளியின் தொப்பி—Q என்று பல தரம் எழுதப்பட்ட அட்டைகள்—தபாலாபீஸ்—பள்ளிக்கூடம்—சம்பளம் கட்டுமிடம்—கோயில் வாசல்—மண்ணெண்ணெய்க் கடை—குடைக் கடை—சர்க்கரைக் கடை—ஆஸ்பத்திரி—முதலியவை. சு. ஜ.]

நகர சோதனைக்கு ஏற்பாடு

I

இராஜா : மந்திரீ ! நமது குடிகள் அனைவரும் க்ஷேமமாக வாழ்ந்து வருகிறார்களா ?

மந்திரி : ஆம் அரசே! தாங்கள் இராஜாவாக இருக்கும்போது குடிகளுக்கு ஒரு குறையுமில்லை. அனைவரும் க்ஷேமமே.

விதூஷகன் : எல்லா வற்றிலும் ஒன்றில் பாதிக்குக் குறைவில்லை, பாதி தாராளமாய்த்தான் கிடைக்கிறது.

இராஜா: நாம் அனைவற்றையும் நேரில் கண்டறிவதே சரி என்று தோன்றுகிறது.

மந்திரி : அப்படியே, மகராஜ்.

இராஜா : இன்று இரவு 8 மணிக்கு மேல், ஊர் ஓசை அடங்கிய பிறகு, நாம் மூவரும் நகர சோதனை போவோம். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுங்கள்.

விதூஷகரே ! நீர் தங்கிவிடக்கூடாது சரியாக 8 மணிக்கு அரண்மனை வந்து சேரும்.

விதூஷகன் : ஆகா ! தடையில்லை. 8 குண்டு போட்டவுடன் முழித்துக் கொண்டு ஓட்டமாக ஓடிவந்துடரேன். மூவரும் ஜனங்கள் சம்பாஷணையை

ஒட்டுக் கேட்டல்

II

மந்திரி : விதூஷகரே ? கஜானு மணிதான் சரியாக 8 மணிக்கு அடிக்கிறார்களே. அரசே ! நான் சரியாக 8 மணிக்கு விழித்துக்கொண்டு அரண்மனைக்குவந்துதங்களைக்காண்கிறேன்.

இராஜா : ஆகா ! அப்படியே.

1. இன்று காலையில்கூட உங்களைக் கடைத்தெருவில் பார்த்தேனே ! எங்கே வந்திருந்தேன் ?

2. எங்குப் பார்த்தாலும் கூட்டமும் கும்பலும் தான் ஒரே சத்தம். இந்தச் சந்தைக் கூச்சலில் என்ன காரியம் சரியாக நடத்த முடியும் ? அரிசி வாங்க முடியவில்லை. விறகுக் கடையில் கூட்டம். ரொட்டிக் கிடங்கில் கூட்டம். எப்படிச் சமாளித்துச் சாமான் வாங்குகிறது ? காலம் தள்ளுகிறதே கஷ்டமாயிருக்கு.

1. மண்ணெண்ணெய்க் கடையில் புட்டியுடன் புட்டி மோதும், மண்டை

யுடன் மண்டை மோதும். புட்டியும் உடையும். மண்டையும் உடையும். மண்டையுடன் மண்டை மோதி மாங்காய் மாதிரி வீங்கி விட்டதே. அதை எல்லாம் கண்ணுலே பார்த்துச் சகிக்க முடியாது.

2. என்ன வெட்கக்கேடு! கூட்டத்தை நினைத்தாலே தலை சுற்றுகிறது. மயக்கம் போட்டுவிழுந்து விடுவேன் போலிருக்கு.

1. பொழுது விடிந்தால் பொழுது போக வேண்டுமென்ற கவலைதான். ஒரு நாள் போகிறது ஒரு யுகம் மாதிரி இருக்கு!

2. காலை 8 மணிக்குக் கிளம்பிக் கடைக்குப் போனு மத்தியானம் 1 மணிக்குக் கூட வீடு திரும்ப முடியவில்லை. என்ன வெட்கக் கேடு.

1. ஜனங்கள் என்ன திடீரென்று புத்தி தடுமாறிப் போய்விட்டார்களா?

அரசாங்கத்தில் இதற்கெல்லாம் கேள்வி முறை கிடையாதா?

2. இதெல்லாம் இராஜா காதில் எங்கே எட்டப் போகிறது?

1. நல்லகாலம் பிறக்காமலா இருக்கப்போகிறது? இதெல்லாம் பேப்பரிலே தெரியப் படுத்தியாவது ஒரு வழி பண்ணவேண்டும். நகர சோதனைக்கு வருகிற ராஜா காதிலே கூடவா விழாமலிருக்கும். போகப் போகத் தெரியும்.

Q-க்கு வரிசை ஏற்பாடு

III

அரசர்: நேற்று இரவு நடந்த சம்பாஷணையை ஒட்டுக் கேட்டு இருந்தோமே! கொஞ்சமாவது உண்மையாய்த் தானிருக்கவேண்டும்.

மந்திரி: ஊரில் கூட்டம் அதிகமாகி பண்டங்களெல்லாம் பங்கீடு வீதம் கொடுக்கப்படுகின்றன.

அரசர்: ஆகவே முன்னைக் காட்டிலும் எங்கும் ஒழுங்கும் அமைதியும் ஏற்படுத்துவது நமது பொறுப்புத்தான். அதற்கு ஏற்ற பரிகாரம் தேட ஒரு நல்ல யோசனை சொல்லுங்கள்.

மந்திரி: அரசே! க்யூ, க்யூ என்று சொல்லுகிறார்களே. அதை ஜனங்கள் அனுஷ்டித்தால் தேவலை. எங்கும் ஒழுங்கும் அமைதியும் ஏற்படும் என்று தோன்றுகிறது.

விதூஷகன்: இங்கிலீஷில் Q என்று கோண எழுத்து உண்டு. அந்த எழுத்துப்போல் கோணலாக இந்த Q ஒழுங்கும் இருக்குமே.

மந்திரி: Q என்றும் எழுத்தல்ல. விதூஷகரே! வரிசைக் கிரமம் காட்டும் ஒரு சொல்.

அரசர்: வேறு எங்கேனும் இதை அமுலுக்குக் கொணர்ந்து நல்ல பலன் கிட்டியிருக்கிறதா?

மந்திரி: ஆம் அரசே! இங்கிலாந்தின் பல பாகங்களில் இந்த க்யூ வரிசை நெடுநாளாக அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது. ரயில், சினிமாக் கொட்டகை, தபாலாபீஸ், ஹோட்டல் எங்கு பார்த்தாலும் இந்த க்யூ வரிசை தான்.

விதூஷகன்: நான்கூட ஒன்று கேள்விப் பட்டேன். மல ஜலம் கழிக்கும் பொதுக் கக்கூஸ்கள் சமீபத்திலும் இந்த க்யூ தானும். அவசரமாய்ப் போய் ஆப்பிட்டுண்டால் வயிறு வெடிச்சுத்தான் போகவேண்டும்.

மந்திரி : எந்தப் பொது இடத்திலும் க்யூதர்ன். இது அவர்களுடைய ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் காட்டுகிறது.

அரசர் : இங்கிலீஷ்காரர்கள் இதை யுத்த காலத்திலும் அனுஷ்டித்தார்களா ?

மந்திரி : அதிலேகூடக் கட்டுப்பாடுதான். சங்கு ஊதினலும் உயிருக்குப் பயந்து ஒளிந்துகொள்ளப் பூமிக்குள் ஓடும்போதும் இந்த க்யூதான். சிற்சில சமயங்களில் இந்த க்யூ வரிசையும் குலேந்ததாம்.

பிரதானி : உயிருக்குப் பயந்து ஓடுகிற போது கூட அகர வரிசையா ?

விதூஷகன் : அகர வரிசை தமிழ் அகராதியில்தான் உண்டு. தெருக்களில் கூடவா அகர வரிசை.

பிரதானி : இருந்தாலும் சாதாரண காலங்களில் இந்த க்யூ வரிசையை நமது நாட்டிலும் கூட அமுலுக்குக் கொண்டு வரவேண்டியதுதான் !

அரசர் : மந்திரீ ! பிரதானி சொல்லுகிறபடி எமக்கும் அப்படியே தோன்றுகிறது. இன்றே ஊர் முழுமையும் தமுக்குப் போட்டு இன்று முதலே இதை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். கூடிய சீக்கிரத்தில் நாம் இந்த ஏற்பாடு எவ்வளவு தூரம் வெற்றி தந்திருக்கிறது. என்று காண நகர சோதனேக்கு வருவோம். எனது ஆணையை மீறி நடப்பவர்கள் தண்டனேக்கு உள் ஆவார்கள் என்று பறையடிக்கவும். நமது உத்தியோகஸ்தர்கள் அனைவரும் இவ்விஷயத்தில் ஜரூராக நடந்துகொள்ளுவது அவசியம் என்று எச்சரிக்கை விடுக்கவும்.

மந்திரி : ஆகா ! அப்படியே செய்கிறேன். மகாராஜ் !

விதூஷகன் : தேவலோகம், பூலோகம், பாதாளலோகம் மூன்று லோகங்களிலும் நமது இராஜா ஆக்கினைதான். (அடேயப்பா ! சுக்கிரீவ ஆக்ஞையாயிருக்கு)

தண்டோரா போட ஏற்பாடு

IV

மந்திரி : சேவகா ! இன்ஸ்பெக்டர் வந்தாச்சா ?

சேவகன் : அதோ வந்து விட்டார்.

இன்ஸ்பெக்டர் : நமஸ்காரம் ! இவ்வளவு அவசரமாகக் கூப்பிட்டது கேட்டுப் பறந்து கொண்டு வருகிறேன்.

மந்திரி : உட்காரும் !

நமது ராஜா, நமது ஊரில் க்யூ ஏற்பாடு உடனே அமுலுக்குக்கொண்டு வர வேண்டுமென்று சொல்லிவிட்டார். ஊரெங்கும் தமுக்குப் போட்டு ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு இடமும் விடாமல் மூலே முடுக்குகளிலெல்லாம் தமுக்குப் போட வேண்டும்.

இன்ஸ் : ஆகா ! அப்படியே. இப்பொழுதே செய்து விடுகிறேன். நாலு ஜவான்களேக் கூப்பிட்டு நான்கு இடத்திற்கு அனுப்பி ஒரே சமயத்தில் தமுக்குப் போட ஏற்பாடு செய்து விடுகிறேன்.

விதூ : நமஸ்காரம் !

மந்திரி : இதென்ன வேஷம் !

விதூ : உங்களுக்குக் காட்டி ஒரு யோசனே கேட்கலாம் என்று வந்தேன்.

மந்திரி : என்னை என்ன யோசனை கேட்கிறது.

அதுதான் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் Queue Queue என்று எழுதித் தள்ளி விட்டீரே. வேறு இடம் பாக்கி இல்லையோ? எண்ணிப் பார்க்கிறேன் 1, 2, 3, 4, 5, 6, 7, 8. 8 இடம் ரொம்ப நன்ருயிருக்கிறது. 8 என்ன? 10 ஆகப் பண்ணிவிடும்!

விதூ: அதற்குத்தான் உங்கள் யோசனை கேட்கவந்தேன். புலி 8 அடி தாண்டினல் குட்டி 10 அடி தாண்டுமாம். இராஜா எள் என்ருல் மந்திரி எண்ணெய் என்கிறீரே. அதுவல்லவா மந்திரி.

மந்திரி: உடம்பிலே இடமேயில்லையோ? வேறு 2 இடம் எங்கே?

விதூஷகன்: இராஜாவிடம் வரும்போது பாருங்கோ ஒன்று மறந்து விட்டேன்' என் பெயரை நான் எப்படி மாற்றி வைத்துக் கொள்கிறது? வெங்கடாசலம் என்ருல் கடைசீயில் நிறுத்தி வைத்து விடுவார்கள். அய்யாசாமி, அண்ணுமலை, அப்பாவு என்று மாற்றி வைத்துக் கொள்ளலாமா என்று யோசனை பண்ணுகிறேன்.

மந்திரி : ஏன் அப்படி?

விதூஷகன் : நீங்கள் தான் வரிசையாக இருக்கணும் என்று சொன்னீர்களே. 'அ' ணுவில் பேர் வந்தால் தானே முதலில் நிற்கலாம்? பள்ளிக்கூட ரிஜிஸ்தரில் கூட அப்படித் தானே இருக்கு.

மந்திரி : அந்த மாதிரி வரிசை யில்லை. கடை கதவு திறக்கும்பொழுது முதலில் இருக்கவேண்டும்.

விதூஷன் : அப்படியாஞல் 8 மணிக்கே ஓடி நின்று விடுகின்றேன். பெயரை மாற்ற வேண்டாமோ இல்லையோ?

மந்திரி: வேண்டாம்! வேண்டாம்!! உமது பெயரே நல்ல பெயர்.

விதூ: வேஷம் போட்டுக்கொண்டுதான் போகவேண்டுமோ!

மந்திரி: நீர் இராஜாங்கத்தில்தான் விதூஷகன் என்ருல் எங்குமா விதூஷகன்?

விதூ : கடைக்குப் போகிறதற்கு நேரம் இருந்தால் அல்லவோ இந்த யோசனை? இராஜாவிடம் போக வேண்டும், போய்வருகிறேன்.

மந்திரி: ஆகா! அப்படியே.

இன்ஸ் : இதோ ஜவான்களை அழைத்து வந்துவிட்டேன். நாலு பேருக்கும் அந்தந்த இடங்களைச் சொல்லி அனுப்பிவிடுகிறேன்.

மந்திரி : முதலில் எங்கே அனுப்பப் போகிறீர்கள்?

இன்ஸ் : கடைத் தெருவுக்கு, காய்கறி மார்க்கெட்டுக்கு.

மந்திரி: நல்ல யோசனை பிறகு......?

இன்ஸ்: ஜனங்கள் கூடுகிற குழாயடி ஆஸ்பத்திரி முதலான இடங்கள்.

மந்திரி : அதுவும் சரிதான்! மூன்ருவதாக!

இன்ஸ் : எல்லா ஆபீஸ்கள் வாசலிலும், ரயிலடி, பஸ் ஸ்டாண்டு, வண்டிகள் நிற்குமிடம், விடாமல் அடிக்கச் சொல்லுகிறேன்.

மந்திரி : கடைசீயாக எங்கே?

இன்ஸ் : கோயில் வாசல், பள்ளிக் கூடம் இங்கெல்லாம் ஞாபகமாகக கக்கூஸ் முன்கூட அடிக்கச் சொல்லி விட்டேன். கண்காட்சிச்சாலே, வித்தை காட்டுமிடங்கள் கூட.

மந்திரி : நல்ல ஏற்பாடு உஷாராக இருக்கவேண்டும். அரசர் நமது ஏற் பாடுகளை மெச்சும்படி நடந்துகொள்ள வேண்டும். ஒரு இடத்தில்கூடப் புகார் வரக் கூடாது.

தண்டோரா போடுதல்

V

கடைத்தெரு, குழாயடி, ரயில், பஸ், கோயில் வாசல்

மகா ஜனங்களே ! எந்தப் பொது நடவடிக்கை இடங்களிலும் ஒழுங்கு வரிசை கவனிக்கப்பட வேண்டும். ஒழுங்கில்லையேல் ஒரு காரியமும் நன்ருய் நடைபெருது. இன்று முதல் எங்கும் க்யூவரிசை அமுலுக்கு வரும். மீறினவர்கள் தண்டனைக் குள்ளாவார்கள்.

VI

அரசர் : மந்திரி ! நமது உத்தரவு எங்கும் அமுல் நடந்து வருகிறதா ?

மந்திரி : ஆம் அரசே! வெகு பேஷாக நடந்து வருகிறது. கூச்சல், குழப்பம் இல்லாமல் எல்லா நடவடிக்கைகளும் அமைதியாகவே நடந்துவருகின்றன. ஆங்காங்கு ஜவான் போடப்பட்டு ஒழுங்கைக் கவனித்து வருகின்றனர்.

அரசர் : குழந்தைகள் முதற்கொண்டே இந்தப் பழக்கம் ஏற்படவேண்டும் என்று நினைக்கிறேன்.

மந்திரி : ஆம் அரசே! பள்ளிக்கூடங் களில் Q முறை அமுலுக்கு வந்து விட்டதே. உபாத்தியாயர்கள் பிள்ளை களை இம்முறையில் நன்கு பழக்கி வருகிருர்கள்.

அரசர் : விதூஷகரே ! இது என்ன வேஷம்?

விதூ : எல்லாம் உங்கள் உத்தரவு. நீங்கள் ஊர் முழுமையும் க்யூ மய மாக்கி விட்டீர்கள். நான் என் உடம்பு முழுமையும் Q மயமாக்கி விட்டேன்.

அரசர் : சம்பந்த ஸ்வாமி உற்சவத் திலே நரி மிரட்டல் வேஷம் போல இருக்கு. உடம்பிலே வேறு இடம் பாக்கி இல்லை.

விதூ : 5 எழுத்து க்யூவுக்கும் 5 நிறம் போட்டுக் கொண்டேன். அதுதான் பஞ்ச வர்ணக் கிளி மாதிரி யிருக்கு. அரண்மனை ஜவானுக்கும் ஒரு தொப்பி கொண்டு வந்திருக்கிறேன். இப் பொழுது எவ்வளவு நன்ருயிருக்கு பாருங்கள். ஊர் ஜவான்களுக்கும் ஒரு Q தொப்பி போட்டால் நன்ருகத் தான் இருக்கும்.

அரசர் : விதூஷகர் கூத்தே கூத்து! மந்திரி! சினிமா, பஸ் ஸ்டாண்டு, குழாயடி இங்கு இந்த உத்தரவை ஒழுங்காய் நடத்த வேண்டித் தக்க ஏற்பாடுகள் செய்தீர்களா ?

மந் : ஆம் அரசே. கோயில் வாசல் முதல் கக்கூஸ் வாசல் வரை, ஒரு இடம் விடாமல் இந்த ஒழுங்கு ஏற் பாடு ஆகி விட்டது. வேண்டுமானல் தாங்களே நேரில் வந்து பார்க்கலாம்.

விதூ : இராஜா வருகிருர் என்ருல் தடபுடல்தான். உத்தியோகஸ்தர்கள் வெருட்டல்தான். போலீஸ் உஷார் எல்லாம் நடக்கும்.

இரவு ஊர் சோதனை போக உண்மை தெரியும். அதுவே இராஜாவின் கடமை.

அரசர்: அப்படியே! ஒரு நாள் இரவு நகர சோதனை போய்ப் பார்த்து வருகிறேன், உத்தியோகஸ்தர்களையும் சரியாக எச்சரிக்கை செய்து வாரும். குற்றம் குறை வராமல் சண்டை சச்சரவு வராமல், அனைவரும் நன்றாக வாழவேண்டுமென்பதே எமது விருப்பம்.

மந்திரி: ஆம் அரசே! ஒரு குறையும் வராமல் பார்த்து வருவதே எங்கள் கடமை. அதை நான் நன்றாக நிறைவேற்றி வைக்கிறேன்.

விதூ: மூன்று உலகங்களிலும் Q உத்தரவுதான். யமனுக்கும் Q உத்தரவுதான். பிரஸவ ஆஸ்பத்திரியிலும் Q உத்தரவு தான். ஆடு, மாடு, காக்கை, குருவி கோழிக்கும் Q உத்தரவுதான். இம்மியும் பிசகக் கூடாது.

A

நகர சோதனை

மீனாட்சி: என்ன க்யூவோ, போங்க, வீட்டிலே பிரஸவக் கேசு, ஆஸ்பத்திரியிலே போய் "அவசரக் கேசு, உடனே அட்மிட் பண்ணணும்னு கேட்டா, Q, Q. முன்னாலே வந்தவாள்ளாம் காத்துண்ட்ருக்கா, சற்று இருங்கோ" என்கிறாள். மழைப் பருவமும், பிள்ளைப் பருவமும் மகாதேவனுக்கும் கூடத் தெரியாது. புது தடபுடலாயிருக்கு.

சரோஜா: குழந்தை அவசரம் அவசரமாகக் கக்கூஸுக்குப் போகணும். வெளியில் ஒரு சேவகன் Q, Q என்கிறானாம். இந்த Qவுக்கு என்னமுடிவோ?

மீனா: Zதான் முடிவு.

சரோ: ரேஸிலே கூட இந்த Qதானும். குதிரைகளுக்கு நம்பர் 1, 2, 3, 4, 5, 6, 7, 8. என்று கொடுத்து, ஓடிவரும்போதும் இதே வரிசையிலே வரவேண்டும் என்று சொல்லிவிட்டா. குதிரை ஓடுகிற ஓட்டத்திலே நம்பர் தாறுமாறு வந்து விட்டது. பலபேர் குதிரைப் பந்தயம் போய்க் குழியிலே விழுந்துட்டா.

மீனா: இத்த மாதிரி குதிரைப் பந்தயம் நடந்தால் குட்டிச் சுவர்தான்.

சரோ: குடை வாங்கணும்னு போனேன். காலை எட்டு மணிக்குப் போய் மத்தியானம் 2 மணிக்கு வெறும் கையாக வந்தேன். வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்?

மீனா: ஒழுங்கு ஒழுங்கு என்று சொல்வதிலும் கூட மோசம் இருக்கத்தான் இருக்கு. நல்லதும் கெட்டதும் கலந்து தான் இருக்கு.

நகர சோதனை

B

மீனாட்சி: வாருங்கோ! சௌக்கியமா? பார்த்து ரொம்ப நாளாச்சு.

சரோஜா: வாருங் கோம்மா! ரொம்ப ரொம்ப நமஸ்காரம் ரொம்ப சந்தோஷம். இந்த ரேஷன் அலைச்சலில் நாம் கூட அலையும்படி ஆகிவிட்டது. இராத்திரியிலாவது உங்களைப் பார்க்கக் கொடுத்து வைத்தேன். அதுவே அதிர்ஷ்டம்.

மீனாட்சி: அந்த அலைச்சலை யாரால் தான் படமுடியும்?

சரோஜா: நாய் அலைச்சல் அலைந்தாலும், பணத்தை அள்ளி விட்டாலும் பண்டமாவது கிடைக்கிறதோ? அதுவும் பூஜ்யம்.

மீனாட்சி : பச்சைக் குழந்தை பாடு மகா தொல்லையாய்ப் போச்சுண்ணு !

சரோஜா : குழந்தைகள் கதி என்னமோ எனக்குப் புரியவில்லை.

சரோஜா : போதாக் குறைக்கு இந்தக் காலத்திலே 'லாக் டோஜனும், 'கௌ அண் கேட்டாம்' "ஆஸ்டர் மில் காம்" புதிசு புதிசா என்னென்ன வெல்லமோ டாக்டர் எழுதிக் கொடுக்கிருளாம்.

சரோ : குட்டிக் கரணம் போட்டால்கூட அதெல்லாம் கிடைக்காதையா !

மீனு : பின்னே என்னதான் பண்றது ?

சரோ : புழுங்கல் அரிசிக் கஞ்சி போட வேண்டியதுதான். நல்ல புழுங்கல் அரிசி தான் எது ஐயா ! அதுக்கும் பறக்க வேண்டியிருக்கே. இராஜாக்களாயிருக்கிறவா இதெல்லாம் கவனிக்கவேண்டாமா ?

ஃ

ராஜலட்சுமி : எங்கே இரண்டு பேரும் சாவகாசமாய் இருக்கேள் ?

மீனாட்சி : இராத்திரியிலே நீங்கள் கிளம்பினேள் ?

சரோஜா : அவர் அவசரத்தைப் பார்த்தால் ஏதாவது சாமான் வாங்கிண்டு போருர் என்று தெரிகிறது.

ராஜலட்சுமி : ஆமாம், குழந்தைக்காகச் சர்க்கரைக்கு அலைச்சலாய் அலைகிறேன். இராத்திரி வாங்க என்று சொன்னுன். அஞ்சு பலம் கிடைக்கிறது அருமையாய்ப் போச்சு. இந்தக் குழந்தைகள் கதிதான் என்னவோ !

மீனாட்சி : இந்த வாயில்லாப் பூச்சிகளை யார் கவனிக்கிருள் ?

சரோஜா : போதாக் குறைக்குக் குளிர் காலம் 5½ மணிக்கு இருட்டி விடுகிறது.

மீனாட்சி : நீங்கள் பேசுகிற போதே தெரிகிறது, விறகு போறல்லே. கிரஸின் ஜலமாக ஊத்தவேண்டியிருக்கு. எங்கே கிடைக்கிறது ?

ராஜலட்சுமி : நானும் அதைத்தான் சொல்ல வாயெடுத்தேன். இரவெல்லாம் குழந்தைகள் படுக்கையை நனைத்து விட்டால் மாற்றுத் துணிக்கு என்ன பண்றது? உணர்த்தி, உணர்த்திப் போடறது சாத்தியமா ?

இந்தப் பஞ்ச காலத்திலே கஷ்டம் சொல்லி முடியலே.

அலமேலு : இந்தப் பஞ்ச காலமாகப் பார்த்து ஏன் குழந்தைகள் பிறக்கிருர்களோ?

சரோஜா : நமக்குத் தான் பஞ்சம். எத்தனை பேர் கொள்ளை லாபம் அடிக்கிரு?

ராஜலட்சுமி : இந்த உத்தரவு போடறவாள் பிள்ளை குட்டி பெற்றவர்கள் இல்லையோ என்னமோ ?

அலமேலு : குழந்தைகளைப் பற்றி யாருக்குன்னு ஞாபகம் ?

சரோஜா : பெற்றவர்களுக்கு அல்லவா பிள்ளை வருத்தம் தெரியும் ?

ராஜலட்சுமி : நான் வீட்டிற்கு அவசரமாகப் போகணும். கஞ்சி வைத்து விட்டுச் சர்க்கரைக்குக் காத்துக்கொண்டிருப்பா. சாவகாசமா அப்புறம் பார்க்கிறேன்.

அலமேலு : ரேஷன் கொடுத்தால் என்ன, கொடுக்காவிட்டால் என்ன ? பெற்றவர்கள் பொறுப்பு, வாய் வயிற்றை அடக்கிக் காப்பாற்றத்தான் வேண்டும்.

(கடைசிப் பக்கம் பார்க்க)

எகோ (ECHO)

[Education Echo-வின் டிஸம்பர் வெளியீடு]



WCOTP-யின் தலைவர்கள், திரு. ஊ தாண்ட்அவர்களைச் சந்தித்தல்

"ஐ. நா.-வைப்பற்றிப் பள்ளிக்கூடங்களில் கற்பிப்பதின்மூலம் ஸர்வதேச-நிலைகளைப்பற்றிய அறிவை மிகுவித்தல்"—என்பது WCOTP—யின் பதின்மூன்றாவது பிரதிநிதிகள்மகாநாட்டில் ஆராய்தற்கு வகுத்த விஷயம். 'நியூயார்க்'கிலுள்ள U.N. தலைமைக்காரியாலயத்தில் அண்மையில் ஊ தாண்ட்அவர்களை WCOTP-யின் தலைவரான ஸர் ரோனால்டு கௌல்டு-உம் (வலம்) ஸெக்ரடரி-ஜனரலான வில்லியம் G. கார்-உம் (இடம்) சந்தித்துப் பேசினர். அப்பொழுது இவ் விஷயம் ஆராயப்பட்டது. அம் மகாநாடு 'பாரிஸ்'நகரில் உள்ள UNESCO-மாளிகையில், 1964-ஜூலை 31முதல் ஆகஸ்ட் 6வரை நடைபெறும்.

ஸர் ரோனால்டு அக்டோபர் மாதத்தில் U.S.-க்கு விஜயஞ்செய்து இரண்டு வாரம் சுற்றுப்பிரயாணஞ்செய்தார். ஆங்கு 'வர்ஜீனியா'க் கல்விச்சங்கத்தின் நூற்றாண்டுவிழாவிலும், 'அயோவா' அரசாங்கக் கல்விச்சங்கம், 'ஒக்லஹோமா' கல்விச்சங்கம் என்பவற்றின் கூட்டங்களிலும் சொற்பொழிவாற்றினார்.

அவர் 'வாஷிங்ட'னில் இருந்தபோது, NEA-யின் அலுவலாளர்எழுநூற்றுவரோடு கலந்துபேசினார்; 'கல்வியின் மேற்பார்வைக்குரியவர் யார்?'—என்பதைப்பற்றி விவாதிக்கும்போது பின்வருமாறு கூறினார்: "பள்ளிக்கூடங்கள் செய்யக்கூடியதைப்பற்றியும் செய்யவேண்டுவனவற்றைப்பற்றியும் தங்கள் கருத்துக்களைப் பொதுமுறையில் வெளிப்படுத்த நாட்டுப்பொதுமக்கள், பிரதேசத்தலைவர்கள், அரசியலார் ஆகியோருக்கு உரிமை உண்டு; ஆயின், ஆசிரியராகிய நாம் பாடத்திட்டத்தையொட்டியும் கல்வியநுபவமுறைகளையொட்டியும் அக் கருத்துக்களை ஏற்ற முறையில் அமைத்துக்கொள்வதற்குத்

தனியுரிமையைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் அனைவரும் இவ்வுரிமையை இழத்தலாகாது என்று உறுதிசெய்துகொள்ளல்வேண்டும்.''



'ஆசிரியர்களுக்குப் பயன்படும்படி மனிதவுரிமைகளைக் கற்பித்தல்' என்னும்—80 பக்கம் கொண்ட—சிறுநூலொன்றனை ஐ. நா. அண்மையில் வெளியிட்டது. அதன் பிரதிகள் U. N. விற்பனைஏஜெண்டுகளிடம் கிடைக்கும்.

1963 டிசம்பர் 10-இல் WCOTP, U.N.-இன் அகிலவுலக மனிதவுரிமைகளைப்பற்றிய தீர்மானத்தின் 15-ஆம் ஆண்டுநிறைவைக் கொண்டாடும் மற்ற உலகச்சங்கங்களோடு சேர்ந்து கொண்டாடும். Education Panorama--என்னும் ஸஞ்சிகையின் அடுத்த-வெளியீட்டின் ஒருபகுதி மனிதவுரிமைகளையும் கல்வி-யையும்பற்றி ஆராய்தற்கு ஒதுக்கப்படும். அவ் வெளி-யீட்டில் U.N.—ஸெக்ரடரி-ஜனரல் ஊ தாண்ட், WCOTP-யின் தலைவர் ஸர் ரோனால்டு கௌல்டு, டென்மார்க்நாட்டுக்கல்வியமைச்சரும் WCOTP — 'வில்லியம் ரஸ்ஸல் பரிசினை' 1963-இல் பெற்றவருமான ஹெல்வெக் பீடர்ஸன் என்னும் இம் மூவரும் எழுதிய கட்டுரைகள் வெளிவரும்.

அமெரிக்கத்தலைவர் ஜான் F. கென்னடியின் கொடிய மரணத்தைக்-குறித்துத் தங்கள் ஆழ்ந்த துக்கத்தையும் அநுதாபத்தையும் அறிவிக்குஞ் செய்திகளை, உலகில் பலபகுதிகளிலுமுள்ள ஆசிரியர்சங்கங்கள் NEA-யின்-மூலம் U. S. ஆசிரியர்களுக்கு அனுப்பியுள்ளன.

WCOTP-யின் உறுப்புச்சங்கங்களும், அதிகாரிகளும் தம் அநுதாபத்-தைத் தெரிவித்துக்கொண்டனர். அவற்றுள் முக்கியமானது, தலைவர் ஸர் ரோனால்டு கௌல்டு விடுத்த செய்தி: "WCOTP-யின் ஆசிரிய-ரனைவரும் உங்களுக்கு நேர்ந்துள்ள கொடிய துக்கத்தில் பங்குகொண்-டுள்ளனர்.''

WCOTP அலுவலாளர் ஆசியாவிலிருந்து திரும்பிவந்தார்

WCOTP-யின் அதிகாரிகளுள் ஒருவரான வில்லியம் உல்ரிச் என்பவர் ஆசியாவைச் சுற்றிப்பார்த்தல்வேண்டுமென்று பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டார். அவர், ஆசியாவிலுள்ள WCOTP-யின் உறுப்புச்சங்கங்களைக் காண்பதற்கு ஏழுவாரம் சுற்றுப்பிரயாணஞ்செய்துவிட்டு, இப்பொழுதுதான் திரும்பிவந்தார்.

அவர் முதலில் பாகிஸ்தானில் தங்கினார். ஆங்கு, 'அகில பாகிஸ்தான் ஆசிரியர் ஸம்மேளன'த்தின் தலைவர்களைக் கண்டு தொடர்புகொண்டு கலந்துரையாடி-னார். அந்த ஸம்மேளனம் WCOTP-யின் புதிய உறுப்புக்களுள் ஒன்று. அது கிழக்குப்பாகிஸ்தான் ஆசிரியர்ஸமஷ்டியையும் தன்னுட்கொண்டது. முன்னதில். தொடக்கப்பள்ளியாசிரியர்சங்கமும் நடுத்தரப்பள்ளியாசிரியர்சங்கமும் அடங்கியுள்ளன. அதன் உறுப்பினர்தொகை 100,000. பின்னதில் எட்டுச்சங்கங்கள் உள்ளன.

அதன் உறுப்பினர்தொகை 60,000. 'அகிலபாகிஸ்தான் ஆசிரியர்ஸம்மேளனத்தின் உறுப்பினர்தொகையைக் கருத்தில் வைத்துப்பார்த்தால், அது WCOTP-யின் பத்து மிகப்பெரிய உறுப்புக்களுள் ஒன்ருகும்.

அவர் இந்தியாவில் WCOTP-யின் உபதலைவரான ஸ்ரீ S. நடராசன்அவர்களையும், கல்விச்சங்கங்களின் அகில இந்திய சம்மேளனத்தின் தலைவரான பேராசிரியர் திரு. D. C. சர்மாஅவர்களையும், WCOTP-யின் பிரதேச அலுவலகத்தின் உதவி-டைரக்டராகிய ஸ்ரீ E. W. ஃபிராங்க்லின்அவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அவர் 'தாய்லாந்'தில் ஆறு நாள் தங்கியிருந்தார். 1964—பிப்ரவரி 16-23-இல் 'பாங்காக்' நகரில் நடைபெறவிருக்கும் WCOTP-ஆசியப்பிரதேச மகாநாட்டின் திட்டத்தை நன்காராய்ந்து பரிசீலனைசெய்வதில், அந் நாட்டுப் பிரதேசக்கமிட்டி-யோடு சேர்ந்து பணியாற்றினர். அம் மகாநாட்டில் கலந்துகொள்வோருக்கு வேண்டிய-அச்சிட்ட அறிமுகத்தாள்களும், உணவுவிடுதித்தாள்களும், WCOTP-வாஷிங்டன் அலுவலகத்திலிருந்து, நவம்பர்மாதத்தில் தபாலில் அனுப்பப்பட்டன. அவற்றைப் பெருத WCOTP-ஆசிரியர்உறுப்புச்சங்கம் ஏதாயினும் இருப்பின், வாஷிங்டன் காரியாலயத்திற்கு எழுதி அவற்றைப்பெற்றுக்கொள்ளல்வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேம்.

இந்தோனேஷியா'வில் திரு. உல்ரிச், அகில இந்தோனேஷிய ஆசிரியர். சங்கத்தின் தலைவர்களைக் கண்டு உரையாடினர்; பின்னர், சிங்கப்பூருக்குச் சென்ருர்-ஆங்கு, தமிழ் மலாய் சீன ஆசிரியர்சங்கங்களின் தலைவர்களோடும், WCOTP-இன் உறுப்புச்சங்கங்களான 'சிங்கப்பூர் ஆசிரியர் தேசீய காங்கிரஸ்', 'சிங்கப்பூர் ஆசிரியர் யூனியன்' என்னும் இரண்டு சங்கங்களின் அதிகாரிகளோடும் கலந்து உரையாடினர். அப்பொழுது பேசிய விஷயங்களுள் எகோ சஞ்சிகையை மலாய்மொழியில் அச்சிட்டு வெளியிடும் விஷயத்தைப்பற்றிய திட்டமும் ஒரு பகுதியாகும். அவர் 'லாவோ'ஸில் கல்வியமைச்சத்துறையில் பணியாற்றும் அறிஞர்களைக் கண்டு, ஸர்வதேச உலக-வளர்ச்சியில் WCOTP தொண்டுசெய்யும் பகுதியைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அவர் மலேயா, வியட்-நாம், ஃபிலிப்பைன்ஸ், தாய்லாந்து, ஜப்பான் என்னும் நாடுகளுக்குச் சென்று, ஆங்காங்குள்ள WCOTP-இன் கிளைச்சங்கங்களுக்கு விஜயஞ்-செய்தார்; 'பாங்காக்'கில் நடைபெறவிருக்கும் ஆசியப்பிரதேசமகாநாட்டுக்கு அனைவரும் வருதல் வேண்டும் என்று வற்புறுத்தினர். அம் மகாநாடு ஆசிய ஆசிரியச் சங்கங்களுக்கு அளிக்கும் நல்வாய்ப்புக்களை எடுத்துக்கூறினர்.

புதிய பள்ளிக்கூடவாண்டு பிறந்த நாளில், பத்திரிகைநிருபர்மகாநாட்டில் கல்வியமைச்சரான ஜல்மன் அரான் என்பவர் இஸ்ரேல் நாட்டில் சென்ற ஆண்டைவிட 30,000 குழந்தைகள் மிகுதியாகப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட இருக்கின்றனர் என்னுஞ்செய்தியை அறிவித்தார்; மூன்றுண்டுக்குழந்தைகள்முதல் உயர்தரக்கல்வியளிக்கும் பல்வேறு கல்விநிலையங்களில் பயிலும் மாணக்கர் இறுதியாக, இந் நாட்டில் ஆக-மொத்தம் 69,000 இளைஞர் கல்விச்சாலைகளில் சேர்தற்கு இருக்கின்றனர் என்றும் கூறினர்.

ரெவரண்டு கானன் S.I. கேன், O.B.E; ICET நிர்வாகக்கமிட்டியின் அங்கத்தினர். 'நைஜிரியா' ஆசிரியர்சங்கத்தின் உபதலைவர்; அண்மையில் 'லாகோஸ் டையோஸீஸின் ஆங்கிளிகள் பிஷப்'பாக நியமனம்பெற்றுள்ளார். இவர் 'நைஜீரியா' நாட்டு 'ஓயோ' நகரில் உள்ள ஸெயிண்ட் ஆண்டுருஸ் போதனைமுறைக்கல்லூரியின் தலைவராக முப்பது ஆண்டுகள் பணிபணியாற்றினர்; ஆம்ஸ்டர்டாம், புதுடில்லி, 'ரியோ' என்னும் நகரங்களில் நடைபெற்ற WCOTP மகாநாடுகளுக்கு விஜயஞ்செய்திருக்கிறார்.

காங்கோ ஆசிரியர்கள் வகுப்பறைக்குத் திரும்பிவருகின்றனர்

சென்ற ஆண்டு மே 15-இல், காங்கோ (லியோபோல்டுவில்லி) ஆசிரியர்கள் வேலைநிறுத்தஞ்செய்தனர் என்னுஞ் செய்தி எகோ ஜூன்வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டது. அக்டோபர் மாதத்தில் அந்நாட்டு அரசாங்கம் 30,000 ஆசிரியர்களுக்குப் பழைய சம்பளபாக்கியை அளிப்பதாக ஒப்புக்கொண்டதனல், அவ்வாசிரியர்கள் மீண்டும் தம் பணியில் ஈடுபடத் தொடங்கினர்.

WCTOP-இன் நிர்வாகக்கமிட்டியங்கத்தினரும் (ஆஃபிரிக்கா), காங்கோ நாட்டு மிகப்பெரிய ஆசிரியர்சங்கத்தின் தலைவருமான ஜோஸஃப் இம்பென்ஸா டூபி என்னும் அறிஞர், ஒற்றுமைநட்புஉதவிச்செய்திகளை அனுப்பி ஆதரித்த WCOTP உறுப்புச்சங்கங்கள்அனைத்தினுக்கும், காங்கோலியா ஆசிரியர் தம் நன்றியறிவை வெளியிடுவதாகக் கூறியுள்ளார். இந் நெருக்கடிநிலையில் பலவித அறிவுரை கூறி ஊக்கமளித்த WCOTP நிர்வாகக்கமிட்டிக்கும் தம் செய்நன்றியறிவைதெரிவித்தார்.

"ஓராண்டுக்குமேல் ஆசிரியர்களுக்குச் சம்பளம் அளிக்கப்படவில்லை. ஆயினும், அவர்கள் தம் பணியைத் தொடர்ந்து நடத்தினர்; பட்டினியும் குடும்பக்குலைவும் மிக்க துன்பத்தை அளித்தபொழுதுதான், தாம் தீவிரமாக வேலைநிறுத்தஞ்செய்யும் முடிவை மேற்கொண்டனர். இது உலகசரித்திரத்திலேயே இதுவரை இல்லாத அதிசயம்"—என்று திரு. இப்பென்ஸா அறிவித்தார்.

லியோநகரில் நடைபெற்ற WCOTP பிரதிநிதிகள் மகாநாட்டில், கங்கோலிய ஆசிரியர்களின் துன்பநிலையை ஜோஸஃப் இம்பென்ஸா டூபி விளக்கிக்கூறியபொழுது எடுத்த படம் இது.

ஆஃப்ரிக்கா :



KNUT தலைவர்களும், WCOTP தலைமைக்காரியாலயத்தின் உத்தியோகஸ்தர்களும்.

KNUT-இன் அதிகாரிகள் எண்மர், சர்வதேசமுன்னேற்ற ஏஜென்ஸியின் சார்பாக, மூன்று மாதம் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் சுற்றுப்பிரயாணஞ்செய்வர். அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் உள்ள ஆசிரியர்சங்கங்களின் நிர்வாகத்தையும் செயல்முறையையும் கண்டறிவதற்கென்று, ஆசிரியசங்கத்தின் தலைவர்கள் ஒருதொகுதியாக வருவது இதுவே முதல்முயற்சி.

இவ்வாறு சுற்றுப்பிரயாணஞ்செய்யவேண்டும் என்னுங் கருத்தை முதன்முதல் அறிவித்தவர் KNUT-யின் பொதுக்காரியதரிசியான ஸ்டீஃபன் J. கியோனி என்பவராவர். அப் பிரயாணத்திட்டத்தை வகுப்பதில் U. S. NEA சங்கம் ஒத்துழைக்கின்றது.

அத் தொகுதியில் உள்ளோர் பின்வருவோராவர் : பாப்டிஸ்டா ஜான் வாகுபு (KNUT தலைவர்) ; ஸேத் லுகோன்ஸோ (பொக்கிஷதார்) ; ஜான் ஜெனிபியா இம்போயி (உப பொதுக்கர்ரியதரிசி, நிர்வாக அங்கத்தினர்) ; பால் போரோ இம்வேரு (KNUT-நைரோபி கிளைச்சங்கத்தின் தலைவர்) ; ஜாமா துஹ்யூ KNUT-நியேதி கிளையின் தலைவர்) ; ஐஸக் வாப்புவா ஜியோகா (KNUT மச்சாகோஸ் கிளையின் தலைவர்) ; ஜேம்ஸ் ராபர்ட்ஸ் ஓயுகி (KNUT பிரத்தியேக 'ஆர்கனைஸர்' ஜாப் ராப்) ; (கெரிகோ கிளையின்; தலைவர்).

———

ஆசியா :

இந்தியநாட்டின் உபராஷ்டிரபதி Dr. ஜாகிர் ஹுஸ்ஸேன் ஆசிரியர்தினத்தன்று வானொலிமூலம் பேசும்பொழுது, ஆசிரியன் தன் நாட்டுமக்களுக்குத் தொண்டனும் தலைவனும் ஆவான் என்று கூறினர் ; "ஆசிரியர்கள், நுண்ணறிவு நல்லொழுக்கம் சமூகப்பொறுப்பு இவற்றின் மணத்தை நாடெங்கும் பரப்பி, பயன்படுஞ்செயலைச் செய்தற்குத் தக்க உறுதியான அடிப்படையை மனத்திற்கு அளித்து, நம் நாட்டுமக்களின் துன்பத்தைக் குறைத்தல்வேண்டும்" என்றும் கூறினர்.

'தாய்வான்' நகரில் **கன்ஃப்யூஷியஸ்** என்னும் ஞானியின் ஜன்மதினத்தை அண்மையில் கொண்டாடியபோது எடுத்த படம் இது. அவருடைய தத்துவக்கருத்துக்கள் ஆசியாமுழுதும் கல்வித்துறையில் பரவியுள்ளன. **கவர்னர் பூவாங்** அப் பிறந்த தினவிழாக்கொண்டாட்டத்திற்குத் தலைமைவகித்தார். கல்விக்கமிஷனரான Dr. **ஊ சௌ-தான்** என்னும் அறிஞரும் அவ் விழாவில் கலந்துகொண்டார்.

———

பாரதத்தின் ராஷ்டிரபதி Dr. S. **ராதாகிருஷ்ணன்** அவர்களின் ஜன்மதினமாகிய ஸெப்டெம்பர் 5-இல் **ஆசிரியர்தினம்** கொண்டாடப்பட்டது. அந் நாளை ஆண்டுதோறும் கொண்டாடவேண்டுமென்று சென்ற ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. அக் கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக பாரதம்முழுதும் உள்ள 85 ஆசிரியர்களுக்கு, அவர்களின் ஒப்பற்ற தொண்டுகளைப் பாராட்டுதற்கு அறிகுறியாக, தேசீயப்பரிசுகள் அளிக்கப்பட்டன.

————

அமெரிக்காஸ் :

சமீபகாலத்தில் உலகம்முழுதும் கூடிய எண்ணற்ற மகாநாடுகளிலும் கூட்டங்களிலும் WCOTP-யின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மேலேயுள்ளது 'கான் ஸெப்ஸியான்' என்னும் நகரில் அக்டோபர் 23-27-இல் நிகழ்ந்த UPCH (Union de Profesores de Chile) 15-ஆம் தேசியமகாநாட்டின் படமாகும். (1) **ஜான். எம். தாம்ப்ஸன்**, WCOTP உதவி ஸெக்ரடரி-ஜனரல்; (2) **மேரியோ அஸ்டோர்கா**, UPCH-இன் புதுத்தலைவர்; (3) UPCH-இன் பழைய தலைவரும் CEA-யின் ஸெக்ரடரி-ஜனரலுமான **ஸீஸர் எஸ்கோபார் லோபெஸ்.**

நவம்பர் 2-3 தேதிகளில் 'மாண்ட்ரு' நகரில் (ஸ்விட்ஸர்லாந்து) நடைபெற்ற IFTA நிர்வாகக்கமிட்டிக்கூட்டத்திற்கு WCOTP-பாரிஸ் கிளையின் டைரக்டரான **வில்ஹெம் ஹெபர்ட்** அந்த ஸம்மேளனத்தின் பிரதிநிதியாகச் சென்றிருந்தார்.

UNESCO, ஜப்பான் கல்வியமைச்சுத்துறை—என்னும் இரண்டனுலும் டோகியோவில் கூட்டப்பட்ட கல்வியாராய்ச்சிமகாநாட்டிற்கு, அச் சம்மேளனத்தின் நிர்வாகக்கமிட்டியங்கத்தினரான **வியட்-நாம் கூயென் கூசின்** என்பார் பிரதிநிதியாகச் சென்ருர்.

ஸ்ரீ S. **நடராஜன்** அவர்கள் (WCOTP உபதலைவர்) 'ஜெனிவா' நகரில் அக்டோபர் 16-19 இல் கூடிய IFFTU-இன் (International Federation of Free Teachers Unions) கூட்டத்திற்கு, அந்த ஸம்மேளனத்தின் சார்பாகச் சென்றிருந்தார்.

WCOTP-நிர்வாகக்கமிட்டியங்கத்தினர் (ஸ்விட்ஸர்லாந்து) **தியோபில் ரிட்ச்னர்** ரோம் நகரில் நவம்பர் 13-16-இல் பசிவிடுதலையியக்கத்தைச் சேர்ந்த FAO-மகாநாட்டில் கலந்துகொண்டார்.

(பதினெட்டாவது ஐ. நா. பொதுமகாநாட்டின் உதவி-ஸெக்ரடரி-ஜனரலும், **ரிச்சர்ட் பி லோ** என்பாரும் U.N. observer for the National Education Association, U.S.A.), WCOTP-இன் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டனர்.

சென்ற ஆகஸ்டு மாதத்தில் 'ரியோ டி ஜனிரோ' நகரில் WCOTP-12-ஆம் பிரதிநிதிகள்மகாநாட்டை நடத்தியதைப் பாராட்டி, 'பிரேஸில்' 'குணபாரா' ராஜ்ய சட்டசபையில் செய்த தீர்மானத்தின் நகலொன்றை WCOTP-தலைமைக்காரியாலயத்திற்கு அனுப்பியிருக்கின்றனர். கீழ்க்கண்ட கடிதம் அச் சட்டசபையின் முதல்காரியதரிசியாகிய ஹெர்குலிஸ் கோரியா என்பவரிடமிருந்து கிடைத்தது: "குணபாரா ராஜ்யத்தின் சட்டசபை ஆகஸ்டு 28-இல் கூடிய கூட்டத்தில், உங்கள் ஸம்மேளனத்தைப் பாராட்டிய தீர்மானமொன்றை நிறைவேற்றிற்று என்னும் நற்செய்தியை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன."

"WCOTP, கல்வித்தரத்தை முன்னேற்றுதற்கும் செப்பஞ்செய்தற்குமென்று இந் நகரில் 12-ஆம் பிரதிநிதிகள்மகாநாட்டைக் கூட்டியதற்காக நாங்கள் எங்கள் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிரும்" - என்பது அத் தீர்மானம்.

ஸர்வதேசம் :

'இஸ்தான்புல்' நகரில் ஸெப்டெம்பர் 2-8 இல் IAUPL-இன் (International Association of University Professors and Lecturers) 12-ஆம் மகாநாடு கூடிற்று. அக் கூட்டத்தில், ஆஃப்ரிக்காவிலுள்ள உரிமைபெற்ற புதிய நாடுகளில் பல்கலைக்கழக-ஆசிரியர்களின் சங்கங்களை ஸ்தாபித்து, அவற்றை IAUPL-உடன் பிணைக்கவேண்டும் என்று தீர்மானஞ்செய்தனர். அம் மகாநாடு ஆஃப்ரிக்காவின் உயர்தரக்கல்வியைப்பற்றிய 6 பகுதிகளைக் கொண்ட தீர்மானமொன்றை நிறைவேற்றிற்று. IAUPL ஆஃப்ரிக்காவின் உயர்தரக்கல்வியைப்பற்றிய பிரச்சினைகளில் தனிக்கவனஞ்செலுத்தல்வேண்டும் என்றும், IAU, UNESCO முதலிய ஸ்தாபனங்களோடு அதன் ஸெக்ரடரி-ஜனரல் ஒத்துழைத்துப் பல்கலைக்கழகவாசிரியர்களைப்பற்றிய செய்திகளைச் சேகரித்து அனுப்புதல் வேண்டும் என்றும் அம் மகாநாடு தீர்மானித்தது.

ஆஃப்ரிக்காவில் அடிப்படைப்பல்கலைக்கழகக்கல்வியை அளிக்க ஊக்குதல் வேண்டும்; ஆஃப்ரிக்கமாணுக்கரைத் தம் நாடுகளில் வரவழைத்து உதவும் பொறுப்புள்ள அதிகாரிகள் அம் மாணுக்கருக்கென்று கீழ்த்தரமான பட்டங்களையோ யோக்யதாபத்ரங்களையோ படைத்தலாகாது—என்றும் அம் மகாநாடு தீர்மானித்தது.

சமூகம் கல்வி இவை சம்பந்தமாகவுள்ள தனிப்பொறுப்புக்கள் ஆசியாவின் பல்கலைக்கழகவாசிரியர்களைச் சார்ந்தவை; ஆதலின், அவர்கள் அக் கண்டத்தில் அளவுக்கு மிஞ்சிய பாடத்திட்டங்களை வகுத்துத் துன்பத்திற்கு ஆளாக்கலாகாது— என்பது அத் தீர்மானத்தின் இறுதிப்பகுதி.

"தற்காலக்கல்வியும் வருங்காலக்கல்வியும்—கண்டு கேட்டு அறிதற்குரிய கருவிகளின் பங்கினைத் திட்டமிடுதல்"—என்னும் பொருளைப்பற்றி ஆராய, WCOTP, UNESCO, ICEF (International Council for Educational Films) ஆகிய மூன்றும் சேர்ந்து, பாரிஸ் நகரில் நவம்பர் 11-15-இல் ஒரு மகாநாட்டைக் கூட்டின.

அம் மகாநாட்டிற்கு WCOTP-யின் பிரதிநிதிகளாகச் சென்றவர்கள்: பேராசிரியர் ஹென்றி லாட்ஜியர் (France, chairman of the WCOTP Committe on on Audio-Visual Instruction), கோஸ்டா ஸார்ஸன் (ஸ்வீடன், Vice-chairman of the Committee), டாக்டர் அன்ன ஹயர் ((U.S.A., Secretary of the Committee), வில்ஹம் எபர்ட் (Director of WCOTP'S Paris Bureau).

இவ்வாண்டுத்தொடக்கத்தில் "திட்டமிட்ட கல்வியும் கற்பிக்குங் கருவிகளும்" (Programme Instructions and Teaching Machines) என்பதனைப்பற்றி ஆராய்தற்கு ஒரு ஸர்வதேச மகா நாடு பெர்லினில் கூட்டப்பட்டது. அப்போது, வில்லியம் ஹெபர்ட், WCOTP-யின் திட்டத்தையும் செயல்முறைகளையும் விரிவாகக் கூறினர். அவை, ஆசிரியர்கள் புதிய கல்விமுறைகளை மேற்கொள்ளல்வேண்டும் என்று கொள்ளும் அக்கறையைச் சான்ருகக் கொண்டு அக் கமிட்டி செய்த வேலையைப்பற்றியவையே ஆகும்.

"திட்டமிட்ட கல்வியும் கற்பிக்குங் கருவிகளும் நிச்சயமாகக் கல்விச்சிக்கல்களை அறுப்பதற்குப் போதியன ஆகா. அவை எதிர்காலத்தில் இருக்கப்போவதில்லை. இத்திட்டமிட்ட கல்வி, மாணுக்கர்க்குத் தனித்தனியாகக் கற்பிப்பதற்கு உதவிசெய்ய இயலும். அதன் பயனுக மிக்க சிறப்பும் பயனும் உள்ளதாக இருக்கும்"—என்று திரு. எபர்ட் அம் மகாநாட்டில் கூறினர்.

WCOTP வெளியிடும் நூல்களைப்பற்றிய செய்திகள்

"Vos Amis de France"—என்னும் பிரெஞ்சுநூலின் இங்கிலீஷ்மொழிபெயர்ப்பு—"பிரான்சில் உங்கள் நண்பர்கள்" ("Your Friends in France") இப்பொழுது விற்பனைக்குத் தயாராக இருக்கின்றது. WCOTP, உலகத்தின் கீழ்ப்பகுதியிலும் மேற்பகுதியிலும் உள்ள குழந்தைகள் பரஸ்பரம் அறிந்துகொள்ளுவதற்கு

அனுகூலமாயிருக்கும்பொருட்டுச் சிறுநூல்களைத் தொடர்ச்சியாக வெளியிடுகிறது.



அவற்றுள் இதுவும் ஒன்று. 16 பக்கம் கொண்ட இச் சிறுநூல் WCOTP-இன் பிரான்சு கிளைச்-சங்கத்தாரோடு (The Syndicat National des Institutrices et Instituteurs), சேர்ந்து ஆராய்ந்து, UNESCO-இன் பொருளுதவியைப் பெற்று வெளியிடப்பட்டது. இப் பிரதி ஒவ்வொன்றின் விலை 70 சென்ட்; 10 பிரதிகளுக்கு-மேல் வாங்கினால், 50 சென்ட் வீதம் விலைக்கு விற்கப்படும். இதனை WCOTP தலைமைக்-காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இந் நூல்வரிசையில் முன்பு வெளியிடப்பட்டது "ஜப்பானில் உங்கள் நண்பர்கள்" என்னுஞ் சிறுநூல். அது ஆங்கிலம், பிரெஞ்சு என்னும் இருமொழிகளிலும் பிரசுரிக்கப்-பட்டுள்ளது. ஒரு பிரதியின் விலை 25 சென்ட். "ஸ்காட்லாந்தில் உங்கள் நண்பர்கள்" என்னும் மூன்றாம் நூல் அண்மையில் வெளியிடப்படும்.

"ஆஃப்ரிக்காவின் கல்விநிலை" என்னுஞ் சிறுநூல்—பனோரமா வெளியிட்டுப் புகழ்பெற்றுள்ள ஆங்கிலப்பதிப்பு—நான்காம் முறை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்-டுள்ளது. தனிப்பிரதிவேண்டுவோர், WCOTP தலைமைக்காரியாலயத்துக்கு எழுதி இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம். அந் நூலின் பிரெஞ்சு-வெளியீடும் கிடைக்கும்.



———

WCOTP முதியோர்கல்விக்கமிட்டியால் உலகில் முதியோர்கல்விக்கென்று பணிசெய்யும் அறிஞர் அனைவரின் பெயர்களும் விலாசத்தோடு அடங்கிய முழுப்பட்டி ஒன்று தயாரிக்கப்பட்-டுள்ளது—என்று அக் கமிட்டியின் காரியதரிசி-யான தாமஸ் மாக்லர்னான் என்பவர் அறிவித்-துள்ளார்; இதுவரை 1000 அறிஞர்களின் பெயர்கள் தொகுக்கப்பட்டுள்ளன என்று அறி-விக்கின்றார். அன்றியும், அக் கமிட்டி, முதியோர்கல்விக்கு உழைக்கும் பொதுஸ்தா-பனங்களுக்கு வேண்டிய செய்திகளை அறிவிக்கும் நிலையமாகவும் விளங்குகின்றது. இப்போழுது அவ்விதக் கடிதப்போக்குவரத்து பத்துமடங்காகப் பெருகிவிட்டது.

அக் கமிட்டி எல்லாத்தேசங்களிலும் வழங்கும் முதியோர்கல்வியைப்பற்றிச் செய்துவரும் ஆராய்ச்சி நல்ல முறையில் நடந்து வருகின்றது என்றும், இறுதியெல்லை-யாகிய 1964-க்குள் அவ்வறிக்கை வெளியிடப்படும் என்றும் அவர் அறிவித்தார். 'Education Panorama' என்னுஞ் சஞ்சிகையில் வெளியிடுவதற்கேற்ற முறையில், தம்தம் நாடுகளில் உள்ள பொதுப்பள்ளிமுதியோர்கல்வித்திட்டங்களைப்பற்றிக் கட்டுரைகள் எழுதியனுப்புமாறு தன் உறுப்புத்தேசங்களுக்கு அக் கமிட்டி வேண்டு-கோள் விடுத்துளது.

———

பிரசுரைகளிலிருந்து பெறும் போதனமுறைக் கருவிகள்

'Free and Inexpensive Materials on World Affairs'—என்னும் நூலுக்கு விளக்கமாக உதவிநூல் ஒன்று, நியூயார்க் கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஆசிரியர்கல்லூரியின் வெளியீட்டுக்குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளது. நூல்நிலையாளர், சங்கத்தலைவர்கள், ஆசிரியர்கள், முதியோர்கல்விக்குழுவினர், உலகவிவகாரங்களில் அக்கறைகொண்டுள்ளோர் முதலியோர், தங்கள் பணிக்குப் பயன்படும் முறையில் செலவின்றி இலவசமாக, கருவிகள் கிடைக்கவேண்டும் என்று கருதுகின்றனர். அவர்களுக்காக இந் நூல் தொகுக்கப்பெற்றது.

83 பக்கம் கொண்ட இந் நூல் லியோனர்டு S. கென்வொர்தி என்பவரால் தொகுக்கப்பெற்றது. இதில் உலகத்தின் ஒவ்வொருபகுதியிலும் பல தனித்தேசங்களிலும் கிடைக்கும் மூலக்கருவிகளும், ஐ.நா. வும் அதன் தனிக்கமிஷன்களும் அதன் ஏஜென்ஸிகளும் உலகவிஷயங்களைப்பற்றி வெளியிட்ட பிரசுரங்களும் அடங்கியுள்ளன. ஒரு பிரதியின் விலை 1·10. கிடைக்குமிடம்: Teachers College, Bureau of Publications, Columbia University, New York.

———

படக்காட்சிமூலம் கல்விகற்பிக்கப் பயன்படும்—கையால் செய்த கருவிகளைப் பற்றிய—(ஆசிரியர்களுக்குப் பயன்படும்)—"Multiplier Handbook" என்னுஞ் சிறுநூல் WCOTP அங்கத்தினர்களுக்குக் கிடைக்குமாறு, 'ஆடியோ-விஷுவல்' போதனைக்கமிட்டி ஏற்பாடுசெய்துள்ளது.

அழகிய படங்களைக் கொண்ட அச் சிறுநூல், குறைந்த அளவு போதனைக்கருவிகளைக் கொண்டோருக்கு எளிதில் விளங்கும் முறையில் குறிக்கப்பட்ட அறிவுரைகளைக் கொண்டுள்ளது. 'சாக்குப்' பலகைகள், சிறுவெளியீட்டுப்பலகைகள், வரைப்படங்கள், சுவரொட்டிகள், பட்டுத்திரைகள், கையால் பிரதியெடுத்தல், மாதிரிகள், பொம்மைகள், கண்காட்சியில் வைக்கப்படும் பொருள்கள் முதலியவற்றைப்பற்றிய பகுதிகள் இந்நூலில் காணப்படும்.

இந்நூற்பிரதிகள் கிடைக்குமிடம்: Dr, Anna Hyer, Secretary, WCOTP Committee on Audio-Visual Instruction, 1227 16th Street, N.W. Washington, D. C., U.S.A.

WCOTP-இன் 1963-ஆம் ஆண்டின் அறிக்கை வெளியிடப்பட்டு, WCOTP வெளியீடுகளை வாங்கும் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்பட்டுவருகின்றது. சென்ற ஆகஸ்டு மாதத்தில் 'ரியோ டி ஜனிரோ' நகரில் நடைபெற்ற 12-ஆம் பிரதிநிதிகள் மகாநாட்டின் நடவடிக்கைகளின் சுருக்கத்தையும் இதில் காணலாம். 1963 "Assembly Theme Study" என்னுந் துணைநூலும் அதனோடு வினியோக்கப்படும். அதில் 1963-ஆம் ஆண்டு மகாநாட்டில் ஆராயப்பட்ட "உயர்தரப் போதனமுறைக்கு இன்றியமையாத தொழில்நிலைகள்" என்னும் விஷயத்தைப்பற்றி உறுப்புச்சங்கங்கள் விடுத்த அறிக்கைகளும் உள.



———